27 ஜனவரி 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 3ம் ஞாயிறு

திருமுழுக்குப் பெற்று அனுப்படுதல்



மாதாந்திர கருப்பொருள்:

கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது

## கிறிஸ்துவின் பணியில் பங்காளிகள் நாம்

திருமுழுக்கின் வழி, கிறிஸ்துவின் குருத்துவ, அரச, குருத்துவ, இறைவாக்குப் பணியில் நாம் பங்காளி ஆகின்றோம். இந்த முப்பெரும் பணியை எவ்வாறு நாம் மேற்கொள்ள வேண்டுமென்ற பயனுள்ளக் கருத்தை இன்றைய வாசகங்கள் வழங்குகின்றன.

**கிறிஸ்துவர்கள் இறைவனுக்குச் சேவை செய்ய, திருமுழுக்கு முத்திரை ஊக்குவிக்கிறது.**

- கத்தோலிக்கத் திரு அவை மறைக்கல்வி, 1273

முதல் வாசகத்தில், ஏழாம் மாதம் முதல் நாளில், குரு எஸ்ரா மக்கள் முன்னிலையில் திருநூலைக் கொண்டு வந்தார். மர மேடையின் மேல் நின்று கொண்டு, திருநூலைத் திறந்தார். எல்லா மக்களும் எழுந்து நின்றார்கள். கடவுளாகிய ஆண்டவரை எஸ்ரா வாழ்த்தினார். மக்கள் கைகளை உயர்த்தி, "ஆமென்! ஆமென்!" என்று பதிலுரைத்தார்கள். பணிந்து, முகங்குப்புற விழுந்து ஆண்டவரைத் தொழுதார்கள். எஸ்ரா, திருநூலை வாசித்து, விளக்கம் கொடுத்தார், மக்கள் அழுது புலம்பினர். திருநூல் வாசிக்கும் போது அவர்கள் எழுந்து நின்றனரா உட்கார்ந்திருந்தனரா என்பது குறிப்பிடப்படவில்லை. ஆனால் வாசிக்கும் போது அவர்கள் முகங்குப்புற விழுந்து தொழுதனர். அது காலை முதல் நண்பகல் வரை. உண்மையிலேயே கடவுளை தொழ வேண்டும், அவரது சட்டங்கள் மதிக்கப்பட வேண்டும். ஏனெனில், கிறிஸ்துவின் குருத்துவப் பணியில் நாமும் பங்காளிகள்.

நற்செய்தி வாசகத்தில், மற்றொரு சம்பவம் பற்றிப் பேசப்படுகிறது. தொழுகைக் கூடத்தில் நுழைந்த இயேசு, குறித்து நேரத்தில் எழுந்து, இறைவாக்கினர் எசாயாவின் சுருளேட்டை வாசித்தார். வாக்களிக்கப்பட்ட மெசியாவின் பணி பற்றி எசாயா முன்னுரைப்பதாக அந்த வாசகம் அமைந்திருந்தது. இயேசு அன்று வாசித்த வாசகம், விண்ணகத் தந்தை அவருக்குக் கொடுத்த பணிக் கட்டளையாக அமைந்திருந்தது. ஆவியால் ஆற்றல் பெற்ற கிறிஸ்து, மனிதனுக்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியும், விடுதலையும், குனநலமும் கொடுக்க அனுப்பப்பட்ட மெசியா. இயேசுவைப் போல் நாமும் உலகில் நற்செய்தியை எடுத்துரைக்க வேண்டும். கிறிஸ்துவின் இறைவாக்குரைக்கும் பணியில் நாமும் பங்காளிகள்.

கொரிந்தியர்க்கு எழுதிய கடிதத்தில், திருஅவை ஒரே உடல் என்பது பற்றி பேசுகிறார். மனித உடலில் ஒவ்வொரு உறுப்பும் தனித்துவம் வாய்ந்தது, அதே வேளையில் ஒன்றொன்று இணைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு உறுப்பும் தனியாக செயல்பட முடியாது அல்லது மற்றொன்றை விட ஒன்று மேலானதல்ல. அவ்வாறே திரு அவையின் ஒவ்வொரு உறுப்பினரும் தனித்துவம் மிக்கவர்கள், அனைவரும் முக்கியம். இது ஏனெனில், **இயேசுவின் பெயரால் திருமுழுக்கு பெற்று, தூய ஆவியால் ஆற்றல் பெற்றுள்ளோம்.** நமது அறிவாற்றல், திறமை, அனுபவம் முதலியவற்றை நமது சேவையால் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொண்டால் திரு அவையும் உலகமும் திருபொழிவு பெறும். இது ஏனெனில் கிறிஸ்துவின் அரசப் பணியில் நாமும் பங்காளிகள். ✝

**Scripture of the Day:**

Neh. 8: 2-6, 8-10;
Ps, 18: 8-10, 15;
1 Cor. 12: 12-30;
Lk. 1: 1-4, 4: 14-21

**வாரம் ஒரு வசனம்**

**இயேசுவின் பெயரால் நாம் திருமுழுக்குப் பெற்றோம்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 04/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

# *2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# *திருமுழுக்கு பெற்று அனுப்புதல்*
## *2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
## *கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது*

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>: பொதுக்காலம் 3ஆம் ஞயிறு (ஆண்டு 3) சனி 26-01-2019 - ஞாயிறு 03-02-2019**
நெகே : 8: 2-4, 5-6, 8-10 தி.பா: 18: 8-9, 10, 15 1 கொரி: 12: 12-30 லூக்கா : 1: 1-4, 14-21
**"ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன" - திபா 18**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 26 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித வேபியன்) | **மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 27 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மறைக்கல்வி படிவம் 1, 2)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி இடைநிலை)<br>திருப்பலி<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 29 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 30 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 31 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 01 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) (முதல் வெள்ளிக்கிழமை)*** |

**பொதுக்காலம் 4ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
எரே : 1: 4-5, 17-19 தி.பா: 71: 1-2, 3-4, 5-6, 15, 17 1 கொரி: 12: 12-31; 13: 13 லூக்கா : 4: 21-30
**"என் வாய் நாள்தோறும் உமது மீட்பை எடுத்துரைக்கும்" - திபா 71**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பசில்) | **மாலை 7.30 மணிக்கு ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்த நாள்: திருப்பலி / மெழுகுவர்த்தி ஆசிர்வதிப்பு / திருச்சுற்று பவணி**<br><br>காலை 8.30 - பகல் 1.00 வரை **மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான தியானம்** |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித கிலாரி)<br>திருப்பலி (ஆ) (புனித அம்புறோஸ்)<br>திருப்பலி<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### ***<u>2018 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>***

**1) பங்கு காணிக்கை:**
19/20 ஜனவரி 2019 - ரிம: 11,114.90
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2) *சீனப்புத்தாண்டை முன்னிட்டு மதிய உணவு விருந்து:***
ரீஜெண்ட் உணவு விடுதி /மார்ச் 03-03-2019
பகல் 12.30- விலை ரிம:50/-
தொடர்புக்கு: டோரீன் (017- 3326 007) பமேலா (016- 630 6196) நாதன் (012- 684 0750)

**3) திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை:**
அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம:6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (தமிழ்) ரிம:5.00
இ) 2019 விவிலிய நாட்குறிப்பு(ஆ/தமிழ்) ரிம:20.00

### *மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்*
அ) மைக்கல் குவெக் சூங் யாங் : இறப்பு: 22/1/2019
ஆ) மார்கெரெட் பத்மாவதி இறப்பு: 25/1/2019

**4) திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின், குருவானவரைச் சந்திக்க தேதியை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**5) அதிச திருப்பலி வழி நடத்தும் பட்டியல்** (ஜனவரி - ஜூன் 2019) தயாராக உள்ளது. அதிச/சோன் பொறுப்பாளர்கள் உங்களின் பிரதியை எடுத்து செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்

**6) பங்கு ஊடகப் பணிக்குழு:** இதுவரை பொறுப்பிலிருந்த திரு மைக்கல் சூங் அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிப்போம். இப்போது பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் திரு அல்பர்ட் அவர்களை வரவேற்போம். உங்களுடைய செய்திகளை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். churchofthevisitation @gmail.com or terminate79@gmail.com

**<u>திருமண அருளடையாளம்: வாழ்த்துகள்:</u>**
அ) ஜோசப் & ராஜேஸ்வரி - 02/02/19 காலை 11.00
ஆ) ராஜ சூரியா&மெக்டலின் 9/2/19 காலை 11.00
இ) போல்செல்வா & இவாஞ்சலின் ஷங்கரி 9/2/19 பகல் 3.30

இன்று திருப்பலியை வழி நடத்திய மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நம்முடைய வாழ்த்துகள்

"சிறப்பு தூதுரைப் பணி ஆண்டு"

**"திருமுழுக்கு அளித்து அனுப்புதல்" : இவ்வுலகில் திரு அவை ஒரு தூதுரைப்பணி**

- **சிறப்பு தூதுரைப் பணி ஆண்டை முன்னிட்டு 'டி' சட்டைகள் விற்பனையில் உள்ளன.** இதற்காக உங்கள் பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுங்கள். நிறங்கள்: வெள்ளை/அரக்கு /பச்சை/இள நீலம் (அளவுகள் (*XS/S/M/L/XL/XXL)*
- திரு அவையை அறிந்து கொள்ளுதல்: திருஅவையை அறிந்துகொள்ளவும் அதைப் போற்றிடவும் வாருங்கள்: நாள்:14-02-2019 (வியாழக்கிழமை) இடம்: *APC*, கோலாலம்பூர் நேரம்: மாலை 7-10 வரை) குறைந்த கட்டணமாக ரிம 10/- ஒரு நபருக்கு: தொடர்புகொள்ள 03-20 26 64 66
- திருத்தொண்டராக திருநிலைப்படுத்துதல்: சகோதரர் ஜோசப் கோமெஸ் நாள்:01/02/2019. இவருக்காக செபிப்போம்.
- **ராக்கேலின் திராட்சைத் தோட்டம்:** கருக்கலைப்பினால் மன அழுத்தத்தில் இருப்போருக்கு அதிலருந்து விடுபடவும், இறைவனின் இரக்கத்தையும் அவரின் அளவற்ற அன்பையும், குணமளிக்கும் அருளையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பு. <u>3 நாள் / 2 இரவு</u> தங்கியிருந்து தியானத்தில் கலந்துகொள்ள அழைக்கிறோம். பினாங்கு 15-17 மார்ச் (பதிவுக்கு இறுதி நாள்: 01-03-2019) கோலாலம்பூர் 21-23 ஆகஸ்ட் (இறுதி நாள்:8-8-2019) தொடர்புக்கு: மேரி (016-419 0538)
- **2019 ஆம் ஆண்டின் மறைக்கல்வி ஞாயிறின் வாழ்த்துகள்**: அனைத்து மறைக்கல்வி, கிறிஸ்துவ புகுமுக ஆசிரியர்கள் மற்றும் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளும் பெற்றோர்/பிள்ளைகள் ஆகிய நாம் அனைவரும் ஏதேனும் ஒரு வகையில் மறைக்கல்வி ஆசிரியர்களாக இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை தொடர்ந்து அனைவருக்கும் எடுத்துச்சொல்ல இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
- **மறைக்கல்வி வகுப்புகள் தொடங்கிவிட்டன.** இன்னும் உங்களுடைய குழந்தைகளைப் பதிந்துகொள்ளாதவர்கள் ஆலய உணவு விடுதிக்கு மேல் (இரண்டாவது மாடி - தமிழ் மறைக்லவி அலுவலகம்) சென்று பதிந்து கொள்ளுங்கள்.தொடர்புக்கு: சூசை செல்வநாதன் (012- 903 6581)
- **மறைக்கல்வ ஆசிரியர்களுக்கான தியானம்:** அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். நாள்:02-02-2019 சனிக்கிழமை
  காலை 8.30 - பகல் 1.00 வரை. இடம்: மினவுதல் தேவாலய மண்டபம்.
  தியானம் வழங்குபவர்: அருட்திரு. பீட்டர் அந்தோணி (தம்பின்)
- **<u>2019 தவக்காலப் பிரச்சாரம்</u>**: மாமறை மாவட்ட மனிதவள மேம்பாட்டுப் பணிக்குழு இதற்கான உரை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:16-02-2019 நேரம்: காலை 8.00 - பகல் 1.00 வரை. இடம்:மினவுதல் தேவாலய மண்டபம். அனைத்து மனித வள மேம்பாட்டுப் பணிக்குழுவினர், அதிச மையக்குழுவினர். மறைக்கல்வி ஆசிரியர்கள், இளைஞர்கள், நற்கருணைப் பணியாளர்கள் அனைவரும் இதில் கட்டாயம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். தொடர்புக்கு: ஜோன் எடிசன் (017- 615 8961)

- **<u>ஆண்டவரைக் காணிக்கையாக்கிய நாள்: 02/02/2019</u>** (சனி) காலை 7.30 - மெழுகுத்திரிகளை ஆசீர்வதித்தல், பவனி மற்றும் திருப்பலி
- ***<u>சீனப்புத்தாண்டு முதல் நாள் திருப்பலி : தித்தி</u>*** 04/02/2019(திங்கள்) காலை 9.00
- ***சீனப்புத்தாண்டு திருப்பலி 05/02/2019 -*** மினதல் தேவாலயம்.(செவ்வாய்) காலை 8.30
- ***<u>சாகா, ரந்தாவ்- புனித லூர்து அன்னை சிற்றாலய திருவிழா</u>***
  8/2/19 (வெள்ளி) செபமாலை/கொடியேற்றம்/திருமணி ஆராதனை/ நோயில் பூசுதல்/திருப்பலி
  9/2/19 (சனி) செபமாலை/திருப்பலி/பவனி
  10/2/19(ஞாயிறு) செபமாலை/திருவிழா திருப்பலி

**கவனத்தில் கொள்ளவும்::** பிப்ரவரி 9 &10 தேதிகளில் ஒவ்வொரு திருப்பலிக்குப் பின்னும் நோயாளிகள், முதியோர் அனைவருக்கும் சிறப்பு ஆசீர் வழங்கப்படும்.